# 3

# தொல்காப்பியம்: பொருள்கோளியல்

- ந.முத்துமோகன்

## மேற்கில்

கிரேக்கம், இலத்தீன் முதலான பழைய ஐரோப்பிய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் Hermeneutics என்ற சொல் பொருள் கோடல் அல்லது பொருள்கோளியல் என்பதற்கு இணையாகப் பழங்காலம் தொட்டே வழக்கிலிருந்து வருகிறது. பொருள்கோளியல் என்பதை பொருள் விளக்கம் குறித்த கோட்பாடு (Theory of Interpretation) என்று அறிஞர்கள் கூறுவார்கள். கூடுதலாக, ஒரு நூலின் அல்லது பனுவலின் பொருண்மையைப் புரிந்து கொள்வதற்கான முறையியலை அது வழங்குகிறது என்றும் கொள்ளலாம். மொழி, இலக்கணம், தருக்கவியல், கலை, இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படைகளைத் தன்னில் கொண்ட துறையாகவும் பொருள்கோளியலைச் சொல்ல முடியும் (Wikipedia: Hermeneutics).

மொழி, இலக்கணம், தருக்கவியல், கலை, இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படைகளைத் தன்னில் கொண்ட துறையாகவும் பொருள் கோளியலைச் சொல்ல முடியும்

கிரேக்கத் தொன்மங்களில் இடம்பெறும் ஹெர்மிஸ் (Hermes) என்ற இறைத்தூதனின் பெயரிலிருந்து இத்துறை அதன் பெயரைப் பெற்றது என்று கூறப்படுகிறது. இறைவனிடமிருந்து மக்களுக்கு ஒரு செய்தியைக் கொண்டு வந்த ஹெர்மிஸிடம், அச்செய்தியின் பொருள் என்ன? என்று மக்கள் கேட்டார்களாம். இறைச் செய்தியின் பொருளை விளக்கிச் சொல்ல வேண்டிய கடமையும் அந்த இறைத்தூதனின் பணிகளில் ஒன்றாகச் சேர்ந்து கொண்டது. இத்தொன்மக் கதையிலிருந்து பொருள்கோளியல் (Hermeneutics) எனில் விளக்கவியல் கோட்பாடு என்ற பெயர் உருவாகிற்று. குறி பார்த்துச் சொல்லுதல், பழைய புராணங்களை ஒருவர் படித்துப் பலருக்கு விளக்கிச் சொல்லுதல், பழைய (புனித) நூல்களுக்கு உரை எழுதுதல் ஆகியவை பொருள் கோளியல் எனும் துறையைச் செழுமைப்படுத்தின. வரலாற்றில் நீண்ட நெடிய காலம் வழக்கிலிருந்து வரும் துறை என்று இதனைச் சொல்லலாம் (Wikipedia: Hermeneutics).

மூலநூல்களுக்கு விளக்கம் அளிப்பதோடு, அவற்றிலிருந்து புதிய திசைகளை நோக்கி விலகிச் செல்லும் வாய்ப்புகளையும் இத்துறை வழங்குகிறது என்றும் நாம் ஊகிக்க முடியும். இடைக்கால ஐரோப்பாவில், கிறித்தவ மத வரலாற்றில் அருட்தந்தையர் பலர் அடுத்தடுத்து விவிலிய மூலநூலுக்கு பல வித விளக்கங்களை வழங்கி வந்துள்ளனர். கிறித்தவ

மத வரலாற்றில் தோன்றிய வேறுபாடுகளுக்கு உள்ளோட்டமாக அமைந்த பல தத்துவக் கிளைகளுக்கு அவ்வக்காலத்திய பொருள் கோளியல் செயல்பாடுகள் தொடக்கமாக அமைந்தன என்று சொல்லலாம்.

15 ஆம் நூற்றாண்டு வரையில் பொருள்கோளியல் எனும் துறை பெருமளவில் கிறித்தவ அருள் விளக்கவியலாளர்களின் செல் வாக்கிலேயே தொழில்பட்டு வந்தது. மறுமலர்ச்சி, அறிவொளி இயக்கம் ஆகியவை எழுச்சிபெற்ற நவீன காலத்தில் பொருள்கோளியல் சமய நிறுவனங்களின் பிடியிலிருந்து படிப்படியாக விடுதலை பெற்றது. நேர்க்காட்சிவாதம், பகுத்தறிவுச் சிந்தனை ஆகியவை புதிய பொருள் கோளியலுக்கான அடிப்படைகளை இட்டன. 19 - 20 ஆம் நூற்றாண்டு களில் பொருள்கோளியலை நிகழ்வியம், இருத்தலியம் போன்ற தத்துவங்கள் மீட்டெடுத்தன. பிரெடெரிக் ஸ்லெயர்மாஹர், வில்லியம் டில்த்தி, மார்ட்டின் ஹெய்டெகெர் போன்றோர் பொருள்கோளியலைப் புதிய தளங்களுக்கு இட்டுச் சென்றனர். ஒரு படைப்பாளியின் நூலைப் புரிந்து கொள்வதற்கு நூலை வாசிப்பவர் படைப்பாளியின் சொந்த அனுபவத்தளத்தை (சஹிருதயர்) எட்ட வேண்டும் என்பது போன்ற விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இருபதாம் நூற்றாண்டில் அமைப்பியல், பின்னை நவீனத்துவம், குறியியல் போன்ற தத்துவப்பள்ளிகள் மொழியியல் சார்ந்த ஒரு திருப்பத்தைப் பொருள்கோளியலில் ஏற்படுத்தின (Hermeneutics: Stanford Encyclopedia of Philosophy). இக்காலத்தில் பால் ரிக்கர், ஹன்ஸ் ஜியார்ஜ் காடமர் போன்ற பொருள்கோளியல் அறிஞர்கள் முக்கிய மானவர்கள். சமீபகாலங்களில் அமைப்பியல், குறியீட்டியல், பின்னை நவீனத்துவம், பின்னைக் காலனியம் (Structuralism, Semiotics, Post Modernism, Post Colonialism) போன்ற மொழி சார்ந்த தத்துவங்கள் முன் கை எடுத்த சூழல்களில் பொருள் கோளியல் ஒரு விரிவடைந்த ஆய்வுத்துறையாக பரிணமித்து வருகிறது. பிரதி - சூழல், ஆசிரியப் பிரதி - வாசகர் பிரதி, வாசிப்பின் வகைகள், பொருண்மை உற்பத்தி, முடிவற்ற பொருண்மை, அணுக்க வாசிப்பு போன்ற பல கருத்தாக் கங்களை மேற்குறித்த தத்துவங்கள் வழங்கி யுள்ளன. பொருள் கோளியலில் பிராய்டியம், மார்க்சியம் ஆகிய கோட்பாடுகளின் செல்வாக்கும் அதிகரித்து வருகிறது.

இருபதாம் நூற்றாண்டில் அமைப்பியல், பின்னை நவீனத்துவம், குறியியல் போன்ற தத்துவப் பள்ளிகள் மொழியியல் சார்ந்த ஒரு திருப்பத்தைப் பொருள் கோளியலில் ஏற்படுத்தின.

**கிழக்கில்**

தமிழில், பண்டைக்காலம் தொட்டு குறி சொல்லுதல், சாமி அருள் வாக்கு கேட்டல், உத்தரவு பெறுதல் போன்ற இனக்குழு மற்றும் நாட்டார் மரபுகள், நடைமுறைகளிலிருந்து பொருள்கோளியல் தோற்றம் பெற்றது என்று கூறலாம். தொல்காப்பியம் நூலில் பொருள்கோடல் குறித்த நூற் பாக்கள் (தொல். சொல். 404-409) அந்நூலின் இரண்டாம் பகுதியான “சொல்லதிகார”த்தின் இறுதிப்பகுதியில் அமைந்துள்ளன.

செய்யுளின் சொற்களையும் சொற்றொடர்களையும் பொருளுக்கு ஏற்ப, பலவகையாகக் "துணித்து, கொண்டுகூட்டி, மாற்றி அமைத்துப் பொருள் கொள்ளல்" என்ற விரிந்த பொருளில் அச்சொல் வழங்குகிறது. நான்கு வகையான பொருள்கோடல் முறைகள் அங்கு சொல்லப்படுகின்றன. தொல்காப்பியத்தை அடியொற்றி நன்னூல் சொல்லதிகாரத்தின் இறுதிப் பகுதியில் எட்டு வகையான பொருள் கோடல் முறைகள் (நன்னூல், சொல்லதிகாரம் 411-419) வரிசைப்படுத்தப்படுகின்றன.

தமிழில் பண்டைக் காலங்களில் எழுதப்பட்ட நூல்களுக்கு அடுத்தடுத்து உரை நூல்கள் எழுதப்பட்ட வரலாற்றை நாம் நன்கு அறிவோம். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களுக்கு இளம் பூரணார், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையார், தெய்வச் சிலையார் போன்ற ஆசிரியர்கள் விரிவாக உரை எழுதினர். திருக் குறளுக்கு பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர் போன்ற அறிஞர்கள் உரை எழுதினர். சமகாலம் வரையில் பழம் நூல்களுக்கு உரைகள் எழுதும் மரபு நின்று நிலைத்துள்ளது. சைவ, வைணவ தோத்திர மற்றும் சாத்திர நூல்களுக்கு செழுமையான உரைத் தொகுதிகள் உண்டு. தமிழிலும் பிற மொழிகளிலும் பொருள்கோளியல் வரலாற்றில் உரையாசியர் மரபுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. உரைகளின்றி முதல் நூல்களைப் படித்துப் புரிந்து கொள்ளுதல் என்பது கிட்டத்தட்ட இயலாத செயலாகவே உள்ளது.

தமிழிலும் பிற மொழிகளிலும் பொருள் கோளியல் வரலாற்றில் உரை யாசியர் மரபுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு.

உரையாசிரியர் மரபு தமிழுக்கே உரிய சிறப்பான மரபு என்று தி.சு.நடராசன் தெரிவிக்கிறார். "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டுத் தோன்றிய சங்க இலக்கியங்களையும் தொல்காப்பியத்தையும் இந்த உரையாசிரியர்கள் தான் நம்மோடு நெருங்கியிருக்கச் செய்திருக்கிறார்கள். தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைகள் மிகமுக்கியமான இடம் வகிக் கின்றன. வேறெந்த மொழிகளிலும் இத்தகைய உரைகளையோ, அவற்றின் நீண்ட வரலாற்றையோ, பன்முகப்பட்ட பரிமாணங்களையோ காணமுடியாது. தமிழ் மொழியின் தனிச்சிறப்பியலான பண்பு இது"(நடராசன், தி.சு., 2013 : 1 - 2).

உரை மரபைப் பேராசிரியர் தி.சு.ந. பண்டைத் தமிழின் கற்கை மரபுடன் இணைத்துக் காட்டுகிறார். "உரை என்பது உரைத்தல் அல்லது சொல்லுதல் என்ற பொருளுடையது. குரு-சீடன், ஆசிரியன் -மாணாக்கன் என்ற உறவு முறையில், ஒருவர் விளக்கிச் சொல்ல பலர் இருந்து கேட்க என்ற முறையில் எழுந்தது உரை. கல்வி அல்லது போதனை என்ற தோரணை இதற்கு உண்டு. "கற்றிலனாகிலும் கேட்க" என்ற அடிப்படையிலான ஒரு தேவையையும் முறைமையையும் கொண்டது. விளக்குதல் என்ற பொருண்மையோடு கூடியது உரை (Commentary) ஆகும்"(மேலது, பக். 2).

நூல், உரை, பொருண்மை உற்பத்தி ஆகியனவற்றை இணைபிரியா நிலையில் தொல்காப்பியம் இணைத்தே குறிப்பிடுகிறது.

"அவற்றுள்
நூல் எனப்படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றி
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்று அகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 471)

என பொருளதிகாரத்தின் மரபியல் எனும் பகுதியில் முதல் நூல், வழி நூல் என்ற பகுப்பினைக் குறித்துப் பேசும் போது தொல்காப்பியம் வழிநூலின் பண்புகளாகக் கீழ்க்கண்டவற்றைச் சுட்டிக்காட்டுகிறது.

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே"

(மேலது, நூற்பா 647)

வழி நூலின் பண்புகள் உரை நூல்களுக்கும் பொருந்துவது போல் உள்ளன.

### எழுத்தும் சொல்லும் பொருளுக்காகவே

இவை ஒருபுறமிருக்க, தொல்காப்பிய நூல் முழுவதையுமே ஒரு மாபெரும் பொருள்கோடல் முயற்சி எனலாம். தமிழ் நிலப்பரப்பெங்கும் சிதறிக் கிடந்த பல ஆயிரம் பாடல்களைத் தொகுக்கவும், பகுத்து வகைப்படுத்தவும், வரையறைக்குள் கொண்டுவரவும், முறையாக அர்த்தப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு பெருமுயற்சியே தொல்காப்பியம் என்று கூறவேண்டும். தமிழின் மொழி இலக்கணக் கட்டமைப்பைத் தெரிந்து கொள்ளாமல், இந்த மண்ணின் வாழ்வியலையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ளாமல் தமிழின் பழம்பாடல்களை அர்த்தப்படுத்த முடியாது என்று இலக்கணப் பேராசிரியர்கள் கருதியிருக்க வேண்டும்.

தமிழின் மொழி இலக்கணக் கட்டமைப்பைத் தெரிந்து கொள்ளாமல், இந்த மண்ணின் வாழ்வியலையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ளாமல் தமிழின் பழம்பாடல்களை அர்த்தப்படுத்த முடியாது என்று இலக்கணப் பேராசிரியர்கள் கருதியிருக்க வேண்டும்.

மேற்குறித்த நோக்கங்களின் அடிப்படையில் தொல்காப்பிய நூலில், எழுத்து / சொல் / பொருள் என்ற மூன்று அதிகாரங்கள் அடுத் தடுத்து எடுத்துரைக்கப்படுகின்றன. எழுத்திலிருந்து சொல், சொல்லிலிருந்து பொருள் (Meaning) என இம்மூன்று இயல்களும் உட்தொடர்பு கொண்டவை. உணர்வுபூர்வமான ஒன்றிலிருந்து ஒன்றாக விரிந்து செல்லும் ஒரு முறையியலை (From Abstract to Concrete) அவை பின் பற்றுகின்றன. மூன்றாவதாக அமைந்துள்ள பொருளதிகாரத்தை எட்டும் போது, பொருண்மை உற்பத்திக்கான உத்திகளும் பரப்பும் மிகச் செழுமையாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

தொல்காப்பியப் பயன்பாட்டில் எழுத்து என்பது மொழியின் மிகக் குறைந்தபட்ச (ஒலியியல்) அலகு. மொழியின் குறைந்த பட்ச அலகை அதன் நேர்க்காட்சித் தளத்தில் எளிதில் கண்டறிந்து விடலாம் என்று நாம் கருத நேரிடும். இருப்பினும், சிக்கலான ஒரு பகுப்பாய்வின் முடிவிலேயே ஒலி அலகுகளை அல்லது எழுத்துக்களைக் கண்டறிய

முடியும். எழுத்துக்களை உயிராகவும் மெய்யாகவும் உயிர்மெய்யாகவும் இன்ன பிறவாகவும் தொல்காப்பிய நூலாசிரியர் வகைப்படுத்தவும் செய்கிறார். எழுத்துக்களை அடையாளப்படுத்திய உடனேயே, விரிவான ஒரு புணரியலை தொல்காப்பியம் கண்டறிகிறது. எழுத்துக்கள் எவ்வாறு சேர்ந்து செயல்படுகின்றன? என்பது அதன் இரண்டாவது மிகப்பெரிய பிரச்சினை. எழுத்ததிகாரத்தின் மூன்றில் இரண்டு பகுதி புணரியல் இலக்கணமாகவே அமைந்துள்ளது என்பதை அறிஞர்கள் எடுத்துக் காட்டுகின்றனர் (*கந்தசாமி, சோ.ந., 2014 : 11*). எழுத்துக்கள் புணராநிலையில், தனித்து நிலவுவது கிடையாது என்ற உண்மை தொல்காப்பிய ஆசிரியரைப் புணரியலை நோக்கி விரட்டுகிறது. எழுத்தியலில் அது செய்து முடிக்கப்படுகிறது.

எழுத்துக்கள் புணராநிலையில், தனித்து நிலவுவது கிடையாது என்ற உண்மை தொல்காப்பிய ஆசிரியரைப் புணரியலை நோக்கி விரட்டுகிறது. எழுத்தியலில் அது செய்து முடிக்கப்படுகிறது.

பல வேளைகளில் எழுத்ததிகாரம் முதல் இயலாக அமைந்தது மிக இயல்பானதாகவும் நேர்க்காட்சிப் பண்பு கொண்டதாகவும் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் பிரச்சினை அவ்வளவு எளிதானதல்ல. எழுத்துக் களை மொழியின் அணுக்களாகவும் அல்லது உயிர், மெய் போன்ற எழுத்துக்களை மொழியின் குறைந்தபட்ச அலகுகளாகவும் கொள்வதில் Abstraction என்ற ஒரு செயல் சம்பந்தப்பட்டிருக்கிறது. பிரத்தியட்சமான, சிக்கலான ஒரு நிகழ்வு அல்லது பொருளை அதன் பலவகைப் பண்புகளாகப் பகுப்பதும், அப்பண்புகளில் ஏதோ ஒன்றை தனித்த நிலையில் ஒரு கருத்தாக்கமாகக் கொள்வதும் Abstraction எனப்படுகிறது. சொல் என்பதும் மொழி என்பதும் ஒலித்துகள்களால் ஆனவை என்ற சமணக் கோட்பாட்டைச் சார்ந்து எழுவதால், (எதார்த்த உலகப் பொருட்களின் குறைந்த பட்ச அலகுகளாக சமணம் அணுத் துகள்களைக் கொள்ளும். ஜீவராசிகளை ஓருயிர், ஈருயிர், மூவுயிர்.. என்ற உயிர் அலகுகளைக் கொண்டு அது அளக்கும்) உயிர், மெய் போன்ற மாத்திரை அளவைகளைக் கொண்ட துகள்களைத் தொல்காப்பியம் தனது குறைந்த பட்ச அலகுகளாகக் கொள்ளுகிறது. இருப்பினும் வெறுமனே எழுத்திலேயே நின்று கொண்டிருப்பது தொல்காப்பியரின் நோக்கம் அல்ல என்பதையும் நம்மால் உணர முடிகிறது.

Abstraction முழு உண்மையாகாது. அது தன் இயல்பான தொடர்புகளை இழந்து தனித்து வரையறுக்கப்படும்போது, உண்மையின் செறிவை இழந்து விடுகிறது. குறிப்பிட்ட சில வரையறைகளுக்குள்ளேயே அது தொழில்பட இயலுகிறது. பகுப்பாய்வின் (Analysis) எல்லைகளுக்குள் மட்டுமே அது தொழில்படுகிறது. அறிதலின் (Epistemological) தேவைகளுக்கு மட்டுமே அது பதில் சொல்லுகிறது.

எழுத்துக்கள் எனும் மொழியின் அணு அலகுகள், அவற்றின் பலவகைப்பட்ட சேர்க்கைகள் ஆகியன மிக விரைவில் நம்மை சொல்லதிகாரத்திற்கு இட்டுச் செல்கின்றன. “எழுத்தினால் ஆக்கப்படும் நால்வகைச் சொற்களின் இலக்கணமும், அவை தொடர்மொழியில் அமைதற்குரிய வரம்பும் பிறவும் சொல்லதிகாரத்தில் சொல்லப்பெற்றன” (மேலது, பக். 11) நால்வகைச் சொற்கள் என இங்கு பெயர்ச்சொல்,

வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியன குறிக்கப்பெற்றுள்ளன. இருப்பினும், அவற்றுள் பெயரும் வினையுமே அடிப்படையானவை எனத் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகின்றது.

“சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண்டு என்ப அறிந்திசி னோரே.
இடைச் சொற்கிளவியும் உரிச்சொற்கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப.”

(தொல். சொல். *158-159*)

தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் கிளவியாக்கம் என்ற இயலிலிருந்து தொடங்குகிறது. கிளவியாக்கம் என்பதைச் சொல்லாக்கம், சொற்றொடர் ஆக்கம், செய்யுள் (இலக்கிய) ஆக்கம் என்று விரித்துக் கொள்ளலாம். ஆயின் இங்கு முன்வைக்கப்படும் “ஆக்கம்” என்ற சொல் கவனத்திற்குரியது. சொல் “ஆக்கப்படுகிறது” அல்லது செய்யப் படுகிறது என்பதன் பொருள் என்ன? ஓரடி பின்னால், இயற்கைப் பொருளை ஆக்குவது கிடையாது, அது இயல்பு சார்ந்தது என்பது சொல்லதிகாரத்தில் தெளிவுபடுத்தப்படுகிறது. செயற்கைப் பொருளின் பண்புகளை ஆக்கிச் சொல்ல வேண்டி வரும் என்பது உணர்த்தப்படுகிறது. சொல் செய்யப்படுகிறது, சொற்றொடர் உருவாக்கப்படுகிறது, செய்யுள் யாக்கப்படுகிறது என்ற வகைப்பட்டு பல சொற்களாக “ஆக்கம்” என்ற சொல்லை விரிக்க முடியும். லூயி அல்த்தூசர் என்ற பிரெஞ்சு மார்க்சியர் பயன்படுத்திய Interpellation என்ற சொல்லின் பொருளை இங்கு நினைவு கோரலாம். குறிப்பிட்ட ஒரு மொழியிலிருந்து ஒரு சொல் கடைந்தெடுக்கப்படுதல், செதுக்குதல், கட்டமைத்தல், உரு-ஆக்கப்படுதல் போன்ற பொருண்மைகளைக் குறிக்கும் சொல் அது.

குறிப்பாக பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியன “ஆக்கப்” படுகின்றன என்று சொல்லதிகாரம் கூறுகிறது. சொற்களுக்குப் பெயர் வழங்குவதில் நிலமும் வினையும் முக்கியப் பங்கேற்கின்றன என்ற வரலாற்றுத் தகவலை இங்கு நாம் விவாதத்தில் சேர்த்துக் கொள்ளுவோம். வினை என்ற கருத்தாக்கம் சமணப் பின்புலத்தில் மையமானது என்பதையும் நினைவில் கொள்வோம். வினை என்ற சொல் அற இலக்கியங்களின் பயன்பாட்டில் கொண்டிருக்கும் நல்வினை, தீவினை போன்ற அற முன்னொட்டுகளைக் கொள்ளாமல் தொல்காப்பிய நூலெங்கும் அறச்சார்பற்ற, புறவயமான பொருண்மையைக் கொண்டே வழங்கி வருகிறது என்பதையும் கண்கிறோம். அறச் சொல்லாடல்கள் இங்கு தவிர்க்கப்படும்போது, அச்சொல் சமூகப் பொருண்மையை ஏற்கும் வாய்ப்புக்கள் அதிகமாகின்றன. சமூக வாழ்வில் மானுடச் செயல், வினை முன்னுரிமை பெறுகிறது என்ற முடிவு மெய்யியல் சிறப்பு கொண்டது. வினையைத் தொட்டு மொழி எழுகிறது என்ற உண்மையும் முக்கியமானது.

சொற்களுக்குப் பெயர் வழங்குவதில் நிலமும் வினையும் முக்கியப் பங்கேற்கின்றன என்ற வரலாற்றுத் தகவலை இங்கு நாம் விவாதத்தில் சேர்த்துக் கொள்ளுவோம்.

சொல்லதிகாரம் மிகவும் உடனடியாக அடுத்துவரும் பொருளதி காரத்தை நோக்கி நீண்டு நிற்கிறது. இது வெறுமனே நூலின்

அதிகாரங்கள் குறித்த பிரச்சினை அல்ல, மாறாக, சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள அடிப்படையான உறவமைப்பால் ஆனது. நன் னூல் சூத்திரம் ஒன்று, சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலான உறவை, "உயிர்க்குடல் போல் பல சொல்லாற் பொருட்கிடனாக.." (நன்னூல், சொல். 268) என்று குறிப்பிடுகிறது. சொல்லும் பொருளும் பிரிக்கவொண்ணா உறவு கொண்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. சொல் ஒரு கூடு போலவும், பொருள் தங்கும் இடமாகவும் சொல்லப்பட்டுள்ளது. சொல் எனும் கூட்டை பொருள் இட்டு நிரப்புகிறது.

சொல் ஒரே நேரத்தில் சொல்லையும் உணர்த்துகிறது, உடனடியாகப் பொருளையும் உணர்த்துகிறது என்பதை மற்றொரு நூற்பா தெளிவுபடக் காட்டுகிறது.

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்"

(தொல். சொல். நூற்பா 156)

அமைப்பியல் சிந்தனை அறிமுகப் படுத்திய குறிப்பான், குறிப்பீடு (Signifier, Signified) என்ற சொற்களை ஒத்தநிலையில் சொன்மை, பொருண்மை என்ற சொற்கள் பயன்பட்டு வருவதை உணர முடிகிறது.

அமைப்பியல் சிந்தனை அறிமுகப்படுத்திய குறிப்பான், குறிப்பீடு (Signifier, Signified) என்ற சொற்களை ஒத்தநிலையில் சொன்மை, பொருண்மை என்ற சொற்கள் பயன்பட்டு வருவதை உணரமுடிகிறது.

இரண்டு நிலைகளில் ஒரு சொல் பொருளுணர்த்துகிறது என்று தொல்காப்பிய நூற்பா தெரிவிக்கிறது.

"தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்
இருபாற்று என்ப பொருண்மை நிலையே"

(தொல். சொல். நூற்பா 157)

அமைப்பியல் சார்ந்த இலக்கியத் திறனாய்வில் Connotation, Denotation என்ற இரண்டு பொருண்மை நிலைகள் சொல்லப்படுகின்றன. இன்னும் சில அறிஞர்கள் மேலோட்டு அமைப்பு, ஆழ்நிலை அமைப்பு (Surface Structure, Deep Structure) என்ற மற்றிரு பொருண்மை நிலைகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். ஈராயிரம் ஆண்டுகட்கு முந்திய தொல்காப்பிய நூல் அம்மாதிரியான இரண்டு நிலைகளைச் சுட்டுவதை இங்கு கவனப்படுத்துவோம்.

### மெய்ப்பாடுகளின் வழி மற்றும் கருப்பொருள் வழி பொருண்மை யாக்கம்

தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் உள்ளத்து உணர்ச்சிகளை உடலின் கண் புலப்படும் வேறுபாடுகளால் எடுத்துரைத்துப் பொருளுணர்த்தும் முறைமையை விளக்குகிறது. உடலின் கண் புலப் படும் வேறுபாடுகளை தொல்காப்பியம் மெய்ப்பாடு என அழைக்கிறது. அவற்றில் முதன்மையானவை எட்டு மெய்ப்பாடுகள் எனவும் அவற்றை விரித்துக் கூறின் முப்பத்து இரண்டு என்றும் அது வரையறுக்கிறது (தொல். பொருள், நூற்பா 245, 247-255). கூடுதலாக மேலும் முப்பத்து

இரண்டு மெய்ப்பாடுகள் துணைமை நிலையில் சுட்டிக்காட்டப்படுகின்றன (தொல். பொருள், நூற்பா 256).

நேரடியாக உடல் மொழியால் மட்டுமின்றி, (கருப்பொருட்கள் எனப்படும்) செடி கொடிகள், மலர்கள், விலங்குகள், பறவைகள், அவற்றின் செயல்பாடுகள் ஆகியவற்றின் வழியாகவும் பொருளைக் குறிப்பாக உணர்த்தும் முறைமையையும் தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல் எடுத்துக் கூறுகிறது. அவற்றை தொல்காப்பியம் இறைச்சி, உள்ளுறை உவமம் எனப் பெயரிட்டு அழைக்கிறது (தொல். பொருள், நூற்பா 225-227, 238-241). இவற்றோடு, கண்ணால் காண முடியாத "காட்டல் ஆகாப்" பொருண்மைகள் பலவும் உண்டு எனவும் தொல்காப்பியம் (தொல். பொருள். நூற்பா 243) கூறுகிறது.

மேற்குறித்த சிக்கலான பொருள் புலப்பாட்டு அடுக்குகள் தொல்காப்பிய நூலில் உள்ளமைந்து அமர்ந்துள்ள பொருள்கோளியல் வளமையை எடுத்துக்காட்டுகின்றன. "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (தொல். சொல். நூற்பா 155) என்ற தொல்காப்பிய சொல்லதிகார நூற்பா சொல்லையும் பொருளையும் முன்வைத்து அந்நூலெங்கும் கட்டி எழுப்பப்பட்டுள்ள பொருள்கோளியல் கோட்பாட்டுச் சிறப்புகளை உணர்த்துகிறது.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்ற தொல்காப்பிய சொல்லதிகார நூற்பா சொல்லையும் பொருளையும் முன்வைத்து அந்நூலெங்கும் கட்டி எழுப்பப் பட்டுள்ள பொருள் கோளியல் கோட்பாட்டுச் சிறப்புகளை உணர்த்துகிறது.

"பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பின்றே" (தொல். சொல் நூற்பா 391). ஒரு சொல்லின் பொருள் இன்னொரு சொல்லால் அறியப்படுமெனின், அறியப்படும் சொல்லின் பொருளையும் தேடிக் கொண்டே போனால் அது வரம்பில்லாமல் போகும் என்று இந்நூற் பாவிற்கு உரை சொல்லப் படுகிறது. ஒரு பருப்பொருளைப் பொருளாக அடையாமல் மற்றொரு கருத்தையே சொல் வடிவில் பதிலாகப் பெறும் நிலை ஏற்பட்டால் அச்சொல்லுக்கு மீண்டும் பொருள் தேடி, வரம்பின்றி தொடரும் நிலை ஏற்படலாம் என்பதனை இந்நூற்பா எடுத்துக் காட்டுகிறது. இன்றைய பொருள்கோளியலில் இது, Endless Semiosis எல்லையற்ற பொருண்மை உருவாக்கம் என்றழைக்கப்படுகிறது. இந்தக் கருத்தை இன்னும் வலியுறுத்துவது போல, மற்றொரு நூற்பா ஒலிக்கிறது.

"மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா"[21]

(தொல். சொல் நூற்பா 394)

## முடிவுரை

தமிழின் முதல் பொருள்கோளியல் நூலாக தொல்காப்பியம் அமைந்துள்ளது. தொன்மையும் புதுமைச் சிறப்புகளும் கொண்ட நூலாக அதனைக் கொள்ள முடியும். தமிழின் பொருள்கோளியல் சிறப்புகளைக் கோட்பாட்டுத் தளத்திலும் பயன்பாட்டுத் தளத்திலும் வெளிக்கொணர அந்நூலால் முடிந்திருக்கிறது. பெரும்பாலும் அகத்திணை உணர்வு-களை முந்நிலைப்படுத்தி சிந்தித்தமையால் கனதியான குறிமப் பண்பு

கொண்டதாக ஒரு கோட்பாட்டை அதனால் உருவாக்க முடிந்திருக்கிறது. தமிழின் செழுமையான பொருள்கோளியல் மரபுகளைக் கொண்டும் இன்றைய மேற்கு நாடுகளின் சிந்தனைப் போக்குகளைக் கொண்டும் தமிழின் உள்ளூறை ஆற்றலை நாம் தொடர்ந்து ஆய்வு செய்ய முடியும்.

## உசாத்துணைகள்


கந்தசாமி, சோ.ந., 2014, தொல்காப்பியத்தின் அமைப்பும் சிறப்பும், சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.

சுபாசந்திரபோஸ், ச., (உ.ஆர்), 2016, தொல்காப்பியம் சொல்லதிகாரம், தஞ்சாவூர்: இயல் பதிப்பகம்.

நடராசன், நி.சு, 2013, உரைகளும் உரையாசிரியர்களும், சென்னை: நியூ செஞ்சரி புக் ஹவுஸ்.

புலியூர்க்கேசிகன் (பதி) 2010 நன்னூல் சொல்லதிகாரம், சென்னை : சாரதா பதிப்பகம்.

Wikipedia Hermeneutics.

Hermeneutics : Stanford Encyclopedia of philisophy.